# எச்சரிக்கை அதன்பிறகு நியாயத்தீர்ப்பு

1

சகோ. பிரன்ஹாம் அவர்களின் மேற்கோள்கள்

(படங்களுடன்)

# கர்த்தர் ஒரு பெரிய மீனை ஆயத்தம் பண்ணியிருந்தார்



# வில்லியம் மரியன் பிரன்ஹாம்

## செய்தி: இக்காலத்தின் அடையாளம், நவம்பர் 13, 1963, நியூயார்க், அமெரிக்கா

*118. இப்பொழுது யோனாவுக்கு வருவோம். அநேகர், "அவன் அவிசுவாசி" என்று கூறுவதாக நான் ஏற்கனவே கூறினேன். இல்லை, அவன் அவிசுவாசி அல்ல.*

*119 அவன் நினிவேக்குச் செல்ல வேண்டியவனாயிருந்தான். அது முற்றிலும் உண்மை. ஏனெனில் அது பாவம் நிறைந்த ஒரு பெரிய பட்டினமாயிருந்தது. ஒருக்கால் அதன் ஜனத்தொகை ஐந்து லட்சம் இருந்திருக்கும். அவர்கள் மிகவும் பொல்லாதவர்களாயிருந்தனர். அது சிறந்த வாணிபப்பட்டினம். அவர்களுடைய முக்கியத் தொழில் மீன் பிடித்தல் என்று நான் படித்திருக்கிறேன். அவன் அங்கு அனுப்பப்பட்டான். ஆனால் அவன் வேறு கப்பல் ஏறி தர்ஷீசுக்குப் புறப்பட்டான்.*

*120.* அவன் அப்படி செய்ய நினைக்கவில்லை என்று அநேகர் கூற முயல்கின்றனர். அது அனைத்தும் தேவனால் திட்டமிடப்பட்டது. நான் ஒரு சிறு கதையைப் படித்துக் கொண்டிருந்தேன். யோனா செய்தது நியாயமென நான் இப்பொழுது கூறுவதற்கு அது ஆதாரமாய் அமைந்துள்ளது.

*121.* யோனா தவறான கப்பலில் ஏறின போது, அவன் தவறான வழியில் சென்று, அதன் விளைவாக தொல்லைக்கு ஆளானான்.



காற்று அப்பொழுது பலமாக அடிக்கத் தொடங்கினது.

அலைகள் கொந்தளித்து பயங்கரமாக இரைச்சலிட்டன.

கப்பல் மூழ்கி விடுமென்று எல்லோரும் கருதினர்.




ஆனால் யோனாவோ அயர்ந்த நித்திரையிலிருந்தான்.

அவர்கள். "நீ நித்திரை பண்ணுகிறது என்ன? எழுந்திருந்து உன் தேவனை நோக்கி வேண்டிக் கொள்" என்றனர்.





*122. யோனா தவறு செய்து விட்டதாக அறிக்கையிட்டான்.*

*அவன், “என் கால்களையும் கைகளையும் கட்டி சமுத்திரத்திலே போட்டு விடுங்கள். அப்பொழுது சமுத்திரம்*

உங்களுக்கு அமர்ந்திருக்கும்” என்றான். அவர்கள் அப்படியே செய்தனர்.



கர்த்தர் ஒரு பெரிய மீனை ஆயத்தம் பண்ணியிருந்தார்.

*123.* அண்மையில் ஒரு விஞ்ஞானி கென்டக்கியிலுள்ள லூயிவில் என்னுமிடத்தில் இவ்விதம் கூறக் கேட்டேன். நான் ஜெபர்ஸன் வில்லில் வசித்தேன். அது சிறிது தூரம் தான். அந்த விஞ்ஞானி திமிங்கிலத்தின் எலும்புக் கூட்டை வைத்து சொற்பொழிவாற்றி, திமிங்கிலத்திற்கு எத்தனை - பற்கள் உண் டென்றும். இன்னும் அநேக காரியங்களைச்

சொல்லிக் கொண்டிருந்தார். முடிவில் அவர், "யோனாவைக் குறித்து வேதத்தில் கூறப்பட்ட வரலாறு உண்மையல்ல" என்றார்.

*124.* அதை என்னால் பொறுத்துக் கொள்ள முடியவில்லை. நான் சற்று அருகில் சென்று, அவர் மேலும் என்ன கூறுகிறார் என்று கேட்க விழைந்தேன்.




*125.* அவர், "ஒரு திமிங்கிலம் யோனாவை விழுங்கினதாக வேத வரலாறு கூறுகின்றதல்லவா? நீங்கள் கவனிக்க விரும்பு கிறேன். இந்த திமிங்கிலத்தின்

தொண்டையின் வழியாக 'பேஸ் பந்து' (Base ball) கூட நுழைய முடியாது என்னும் போது, ஒரு மனிதன் எப்படி நுழைந்திருக்க முடியுமென்று யோசித்து பாருங்கள். அது தவறு" என்றார்,

*126.* அந்த நாத்திகன் இத்தகைய காரியங்களைக் கூறுவதை என்னால் பொறுத்துக் கொள்ள முடியவில்லை.

நான், "ஐயா, என்னை மன்னிக்க வேண்டுகிறேன். நீங்கள் எப்பொழுதாகிலும் வேதத்தைப் படித்ததுண்டா?" என்று கேட்டேன்.

அவர், "நிச்சயமாக" என்று பதிலுரைத்தார்.

*127.* "அப்படியிருந்தும் இவ்வாறு கூறுகின்றீரே! அது திமிங்கிலம் என்று கர்த்தர் கூறவில்லை, அது 'மீன்' என்று தான் கூறினார்." என்றேன்.

அவர், "அது திமிங்கிலமாகத்தான் இருந்திருக்க வேண்டும்" என்றார்.



*128. நான், "சரி, அது திமிங்கிலம் என்றே வைத்துக் கொள்வோம். ஆனால் அது விசேஷமாக ஆயத்தம் பண்ணப்பட்டது. கர்த்தர் அவனுக்காக ஒரு மீனை ஆயத்தம் பண்ணினார். இது விசேஷமான ஒன்று. இந்த மோட்டார் வாகனம் அதன் தொண்டையில் புகக்கூடிய அளவுக்கு அவரால் ஒரு மீனை ஆயத்தம் பண்ண முடியும். அவர் தேவன், பாருங்கள். எனவே வேதத்தில் கூறப்பட்டது உண்மையே. கர்த்தர் யோனாவுக்காக ஒரு மீனை ஆயத்தப்படுத்தினார். அது விசேஷமான மீன், எனவே அது யோனவை விழுங்கினது" என்றேன்.*



*129.* யோனா இந்த விசேஷமான மீனின் வயிற்றில் இருந்தான். அவன் கைகளும் கால்களும் கட்டப்பட்டிருந்தன.

அவன் எந்நிலையில் இருந்திருப்பான் என்று உங்களால் கற்பனை செய்ய முடியும்.

இந்த மீன், மற்றெல்லா மீன்களையும் போல், தன் ஆகாரத்திற்காக நீர் மட்டத்துக்கு வந்து, ஆகாரம் கிடைத்தவுடன் கடலின் அடியில் சென்றிருக்கும்,

130. உங்கள் பொன் மீன்களுக்கு ஆகாரம் போட்டு கவனித்துப் பாருங்கள்.

அதன் வயிறு நிரம்பினவுடனே, அது அடிமட்டத்துக்கு - சென்று, தன் சிறு செதில்களை விரித்து இளைப்பாறுகிறது.

ஏனெனில் அதன் ஆகாரத்தை அது பெற்றுக் கொண்டு விட்டது.



*131.* இந்த மீன் யோனா தீர்க்கதரிசியை விழுங்கினவுடனே கடலின் அடியில் சென்றிருக்க வேண்டும். அது உண்மையாக அப்படி சென்றதா என்று எனக்குத் தெரியாது. அது அடியில் சென்றிருக்கலாம் என்று ஊகிக்கிறேன். இந்த மனிதன் அங்கிருக்கிறான்.



*132. நாம் எப்பொழுதுமே நமது அறிகுறிகளை* (symptoms) *மாத்திரமே யோசித்துக் கொண்டிருக்க விரும்புகிறோம், அல்லது சாத்தான் அவைகளை நமக்கு எடுத்துக் காண்பிக்க நாம் அனுமதிக்கிறோம். அவன், "நேற்றை விட இன்று நீ சுகமாக இல்லையே! நீ சுகமாகவில்லை" என்பான். நீங்கள் அறிகுறிகளைக் காணவேண்டாம்.*

*133. யாருக்காவது அறிகுறிகள் காணப்பட்டால், அது யோனாவுக்கு தான். பாருங்கள்? அவன் எல்லா பக்கங்களிலும் மீனின் வயிற்றையே கண்டான். பாருங்கள்? ஆனால் அவன் என்ன சொன்னான் தெரியுமா? "இவை பொய்யான மாயை" என்றான் (யோனா 3:8.). அவன், "அதையே பார்த்துக் கொண்டிருக்கப் போகிறேன்" என்று சொல்லவில்லை. அவன், "இன்னமும் உம்முடைய பரிசுத்த ஆலயத்தை நோக்குவேன்" என்றான். (யோனா 2:4).*

*134. ஏனெனில் சாலொமோன் ஜெபம் பண்ணி அந்த ஆலயத்தை பிரதிஷ்டை செய்தபோது, "உமது ஜனங்கள் வியாகுலமடைந்து, இந்த ஆலயத்தை நோக்கி*

*விண்ணப்பம் பண்ணினால், பரலோகத்திலிருந்து அதைக் கேட்டருளும்" என்றான் (2 நாளா. 5:29-39). யோனாவுக்கு சாலொமோனின் ஜெபத்தில் நம்பிக்கையிருந்தது. சாலொமோன் நம்மைப் போல இவ்வுலகைச் சேர்ந்த சாதாரண மனிதன். சிறிது காலம் கழித்து அவன் பின்வாங்கிப் போனான். ஸ்திரீகள் அவனை தேவனை விட்டு இழுத்துச் சென்றனர். ஆயினும் அவன் ஜெபத்தை தேவன் கேட்டார். யோனா, தான் இருந்த சூழ்நிலை யிலும் கூட விசுவாசத்தைப் பெற்றிருக்க முடிந்தது.*

*135. அப்படியிருக்க, மனிதனால் கட்டப்பட்ட ஒரு ஆயலத்தை நோக்கிப் பார்க்கவேண்டிய அவசியமிராமல், பரலோகத்தையே நோக்கிப் பார்க்க வேண்டிய நமக்கு விசுவாசம் இன்னும் எவ்வளவு அதிகமாக இருக்கவேண்டும்? பரலோகத்தில் தேவனுடைய குமாரன் தமது மகிமையின் வலது பாரிசத்தில் வீற்றிருந்து என்றென்றும் ஜீவிக்கிறவராய், தமது சொந்த இரத்தத்தின்*

*மூலம் நமக்காக வேண்டுதல் செய்து கொண்டிருக்கிறாரே!*

*136. நமக்கு யாருக்குமே யோனாவுக்கிருந்த அறிகுறிகள் கிடையாது. ஜனங்கள் தேவனுடைய சமுகத்தில் எல்லா சமயங்களிலும் சுகம் பெறுவதை நாம் கண்டிருக்கிறோம். நாம் அறிகுறிகளை நோக்கக் கூடாது. அவை பொய்யான மாயை. வாக்குத்தத்தம் பண்ணின தேவனை நோக்கிப் பாருங்கள்.*

*137. அந்த தீர்க்கதரிசிக்கு தேவன் எப்படி பிராணவாயு கிடைக்கும்படி செய்தார் என்று எனக்குத் தெரியாது. ஆனால் அவன் இரவும் பகலும் மூன்று நாள் உயிர்வாழ்ந்தான் என்று வேதம் கூறுகிறது. தர்ஷீசு பட்டினம் நினிவேயிலிருந்து கடல் வழியாக எவ்வளவு தூரம் என்றும் எனக்குத் தெரியாது. ஆனால், வேதத்தின்படி யோனா இரவும் பகலும் மூன்று நாள் மீனின் வயிற்றில் உயிரோடிருந்தான், அவன் அவரை நோக்கி விண்ணப்பம் பண்ணினான்,*

*"ஓ, அது கூடாத காரியம்" எனலாம்.*

*138. லாசரு மரித்து நான்கு நாட்களான பின்பு, அவர் அவனை உயிரோடு வரும்படி அழைத்ததைக் குறித்து என்ன நினைக்கிறீர்கள்? அது போன்று, நாம் மரித்து பத்தாயிரம் ஆண்டுகள் கழிந்திருந்தாலும், அவர் ஒரு நாளில் நம்மையும் அழைப்பார். எத்தனை ஆண்டுகள் கடந்தாலும், அது அவருக்கு ஒன்றுமில்லை. பாருங்கள், அவர் தேவனாயிருக்கிறார்.*

*139. அவன் நினிவேக்கு வருகிறான் என்று நாம் காண்கிறோம்.*

*ஒரு மீன் தண்ணீரில் நீந்தி வருகிறது, அவனுக்கு கடலின் அடியில் நினிவே வரை 'வாடகை கார்' சவாரி கிடைக்கிறது. அப்பொழுது பகல் நேரமாக இருந்திருக்கும்.*

*140. நினிவே ஜனங்கள் மீன்பிடிப்பவர்கள். அவர்கள் வலையை இழுத்துக் கொண்டிருந்தனர்.*

*அவர்கள் மீன் விற்று வாணிபம் செய்பவர்கள். அவர்கள் அஞ்ஞானிகள். அவர்கள் விக்கிரகங்களை வணங்கினர், அவர்களுடைய தெய்வங்களில் ஒன்று ....*

*141.* இங்குள்ள அமெரிக்க இந்தியர்களுக்கு சாம்பல் நிறக்கரடி தெய்வமாயிருந்தது போல (உர்சஸ்?).

இந்த அஞ்ஞானி இந்தியர்கள் கிறிஸ்தவர்களாகும் முன்பு இதை தான் வணங்கிவந்தனர். அது சக்திக்கு தெய்வமாயிருந்தது.



*142.* நினிவேயில் திமிங்கிலம் கடல் தெய்வமாக வழிபட்டு வந்ததாக நான் கேள்விப்பட்டிருக்கிறேன்.

ஏனெனில் அது கடலின் எஜமானாயிருந்தது.

அது எதை வேண்டுமானாலும் விழுங்கக்கூடும்.

ஏறக்குறைய பகல் வேளையில், அவர்களுடைய தெய்வம் தண்ணீரை விட்டு வெளிவந்து, தன் வாயைத் திறக்கிறது.

தீர்க்கதரிசி அதை விட்டு வெளிநடந்து கரையை அடைகிறான்.

அவன் கூறினதை அவர்கள் நம்பினதில் வியப்பொன்றுமில்லை.





பாருங்கள்? அவர்கள் உறுதியாக விசுவாசம் வைத்தனர்.

ஏனெனில் செய்தியையளித்த தீர்க்கதரிசி அவர்களுடைய தெய்வத்தின் வாயிலிருந்து புறப்பட்டு வந்து, “மனந்திரும்புங்கள், இல்லாவிட்டால் நினிவே அழிக்கப்படும்” என்று அறைகூவினான். பாருங்கள்?









*143. எனவே அவன் கர்த்தருடைய சித்தத்துக்கு அப்பாற்பட்டவனாக இல்லை.*

*“தேவனிடத்தில் அன்புகூருகிறவர்களுக்கு தேவன் சகலத்தையும் நன்மைக்கு ஏதுவாக செய்கிறார்” (ரோமர் 8:28) என்னும் வசனத்திற்கேற்ப, இவனுடைய செயல் அமைந்திருந்தது. அது உண்மை.*

*“அவருடைய தீர்மானத்தின்படி அழைக்கப்பட்டவர்களுக்கு,” இயேசு அவனைக் குறிப்பிட்டார்.*































# லோத்து எச்சரிக்கப்பட்டான்



## வில்லியம் மரியன் பிரன்ஹாம்

# ஆதியாகமம் 19:1

அந்த இரண்டு தூதரும்
சாயங்காலத்திலே சோதோமுக்கு
வந்தார்கள்; லோத்து
சோதோமின் வாசலிலே
உட்கார்ந்திருந்தான். அவர்களைக்
கண்டு, லோத்து எழுந்து
எதிர்கொண்டு தரைமட்டும்
குனிந்து:

39. இன்றைக்கு உலகத்திற்கு - அதுவும் அமெரிக்காவிற்கு - சுவிசேஷம் தேவையில்லை. அவர்கள் விரும்புவது களியாட்டே. அவர்களை மகிழ்விக்க அவர்களுக்கு ஏதாவதொன்று தேவையுள்ளது - நிறைய புதுமையான இசை அல்லது விருந்துகள், அல்லது கன்று ரோஸ்டு போன்றவை. இவையெல்லாம் நல்லதுதான் - சபைக்குப் புறம்பே. **ஆனால் சபையில் நியாயதீர்ப்பானது கர்த்தராகிய இயேசுவின் உயிர்த்தெழுந்த வல்லமையில் பிரசங்கிக்கப்பட்டு, எச்சரிக்கை விடுக்கப்பட வேண்டும். நியாயத்தீர்ப்பு தேவனுடைய வீட்டில் துவங்குகிறது. விருந்துகள் அல்ல. நியாயத்தீர்ப்பு.**

**லோத்து எச்சரிக்கப்பட்டான்.** தூதர்கள் - அவர்கள் தூதர்கள் என்று அவன் அறியவில்லை - **அங்கு சென்று, "இந்த பாவமுள்ள இடத்தை விட்டு வெளியே வா! நீ தப்பித்துக் கொள்ள தேவன் உனக்கு ஒரு வழியை உண்டாக்கியிருக்கிறார். "இந்த பாவமுள்ள இடத்தை விட்டு வெளியே வா"! என்று சோதோமுக்கு தங்கள் செய்தியை அளித்தனர்.**

~ **4** ~

## *செய்தி: 60-02-29 வருகின்ற புயல்*

★★★★★

# தேவன் ஒரு மனிதனை, அதைக் குறித்து எச்சரிக்காமல், அவனை அவனுடைய மரணத்துக்கு கொண்டு வருவதில்லை





வில்லியம் மரியன் பிரன்ஹாம்

## செய்தி: தேவன் ஒரு மனிதனை முதலில் எச்சரிக்காமல் அவனை நியாயத்தீர்ப்புக்குள் கொண்டு வருவதில்லை, ஜூலை 24, 1963

இப்பொழுது, எல்லோருமே இந்த கருத்தைக் கொண்டுள்ளனர். **நாம் ஒருக்கால், "இந்த ஆள் எந்த எச்சரிக்கையுமின்றி மரித்துப் போனான்" என்று கூறக்கூடும். இல்லை, இல்லை, இல்லை, தேவன் ஒருபோதும்... அந்த மனிதனின் இருதயத்தில் என்ன இருந்தது என்பதை நீங்கள் அறியீர்கள்.** அவனுடைய வாழ்க்கையில் என்ன நடந்து கொண்டிருந்தது என்பதை நீங்கள் அறியீர்கள். பாருங்கள்? **தேவன் ஒரு மனிதனை, அதைக் குறித்து எச்சரிக்காமல், அவனை அவனுடைய மரணத்துக்கு கொண்டு வருவதில்லை.** அதை ஒரு ஆயத்தமாக அவனுக்கு முன்னறிவிக்

**கிறார்.** தேவன் இராஜாதிபத்தியம் உள்ளவர். **அவர் ஒவ்வொரு மனிதனுடைய இருதயத்தையும் தட்டி அவன் வருவதற்கான தருணத்தை அவனுக்கு அளிக்கிறார். அவன் ஒருக்கால் எச்சரிப்பை ஏற்றுக் கொள்ளாமல் அதை நிராகரித்து, தன் தலையை குலுக்கி அதிலிருந்து விலகிச் சென்று,** "ஆ, இது ஏதோ ஒரு விசித்திரமான உணர்ச்சி, அதை மேற்கொள்வேன்" **என்று கூறிவிடலாம். ஆனால், என்னவாயினும், அது தேவன், தேவன் அவனிடம் பேசுதல்.**

**தேவன் ஜனங்களுக்கு முதலில் எச்சரிக்கை விடுக்காமல், இந்த உலகத்தின் மேலும் கூட நியாயத்தீர்ப்பைக் கொண்டு வருவதில்லை.** தேவன், தாம் என்ன செய்யப் போகிறார் என்பதை முதலில் அறிவிக்காமல், எதையும் செய்வதில்லை. **தேவன் ஜனங்களுக்கு தெரிந்தெடுத்தலை** (Choice) **அளிக்கிறார்.** நீங்கள் சரியானதை செய்யலாம், அல்லது தவறானதைச் செய்யலாம், அது அவருடைய... **பாருங்கள், தேவன் ஒருபோதும் தமது சுபாவத்தை மாற்றிக் கொள்ளமுடியாது.** அவருடைய திட்டம், அவர் எதிலிருந்து தொடங்

கினாரோ, அதிலிருந்து மாறமுடியாது. ஏனெனில் அவர் முடிவற்றவர், அவருடைய திட்டமும் கருத்துக்களும் எல்லாமே பரிபூரணமானவை. எனவே, அவர் அதை மாற்றுவாரானால், அவர் அதிகம் கற்றுக் கொண்டார் என்பதாக ஆகிவிடும். அவர் முடிவற்றவராயிருப்பதால், அவரால் அதிகம் கற்றுக் கொள்ள முடியாது. **அவருடைய முதலாம் தீர்மானம் எப்பொழுதுமே பரிபூரணமாய் உள்ளது, அதை எதுவுமே மாற்ற முடியாது.** பாருங்கள்?

தேவன் மனிதனுக்கு... **அவன் தவறு செய்யத் தருணம் கிடைப்பதற்கு முன்பாக, அதை ஏற்றுக்கொள்ள அல்லது புறக்க ணிக்கக் கூடிய அடிப்படையில் அவனை வைத்தார் - அவன் ஏற்றுக் கொள்வானா, இல்லையா என்று.**







80. அதிலுள்ள மிகவும் மோசமான காரியம் என்னவென்றால், பரிசுத்த ஆவியை நீங்கள் அடிக்கடி துக்கப்படுத்தும்போது அந்த எல்லைக் கோட்டை தாண்டிப்போனவர்களாக இருக்கிறீர்கள். அப்போது மனந்திரும்புதலுக்கு இடமில்லாமல் இருக்கும் அந்த இடத்திற்குப் போய் அந்தகாரத்தின் ராஜ்ஜியத்திற்குள்ளாக முத்திரிக்கப்பட்டிருப்பீர்கள். அங்கே ஆண்டவராகிய இயேசுவை ஒருபோதும் காணமுடியாது. அங்கே வாழ்கைக்கான நம்பிக்கையை ஒருபோதும் காணமுடியாது. நீங்கள் என்றென்றைக்குமாய் வெளியிலே தள்ளப்பட்டவர்களாய் குறிக்கப்பட்டிருப்பீர்கள். ஓ,

இது என்ன ஒரு சரியான எச்சரிக்கை பாருங்கள். பரிசுத்த ஆவியானவர் இதை உங்கள் இருதயத்தின் ஆழத்திற்குள் கொண்டு செல்வாராக.

81. எல்லைக் கோட்டண்டை நிற்கிறவர்களே, "நான் முற்றிலும் அற்பணிக்கப்பட்ட கிறிஸ்தவனாகிட விரும்புகிறேன். ஆனால் நான் அதை எப்பொழுது செய்வேன் என்று என்னுடைய சிந்தையிலே முடிவு எடுக்கிறேனோ அப்பொழுது தான் செய்வேன்" என்று அநேக முறை சிந்தித்திருக்கிறீர்கள். ஓ, என் சகோதரனே சகோதரியே, நீங்கள் அவ்விதம் மாறுவதற்கு இதுவே உங்களுடைய கடைசி தருணமாய் இருக்கக் கூடும் என்பதை உணரமுடிகிறதா? நீங்கள் கிறிஸ்தவ விசுவாசிகளாவதற்கு இப்படிப்பட்ட ஒரு தருணம் இனிமேல் உங்களுக்கு கிடைக்கக் கூடாதபடி ஒருவேளை இதுவே உங்களுடைய கடைசி இரவாக இருக்கக்கூடும். ஒருவேளை இன்றிரவே நீ தேவனுடைய செய்தியை கடைசி முறையாய் புறம்பே தள்ளுகிறவனாக இருக்கக்கூடும். அப்படி செய்யும்பட்சத்தில், நீ தேவனுடைய பார்வையிலே ஒரு விசுவாச துரோகியாய் காணப்படுவாய்.

*செய்தி: யூபிலி ஆண்டு*

★★★★★



நாம் சுற்றிலும் உட்கார்ந்து கொண்டு அதைக் குறித்து சிந்தித்துக் கொண்டோ அல்லது வியந்து கொண்டு இருக்கவோ நமக்கு நேரமில்லை. நாம் துரிதமாக தீர்மானம் செய்ய வேண்டியுள்ளது. காலம் சமீபமாயுள்ளது. இன்றிரவு இங்கே உட்கார்ந்து கொண்டிருக்கும் ஜனங்களுக்கு, உங்களுடைய தீர்மானத்தைச் செய்வதற்கு இதுவே உங்களுடைய கடைசி தருணமாக இருக்கலாம். இது அவசரமாக இருக்கிறது. நாளைய தினம் பார்த்துக் கொள்ளலாம் என்ற நம்பிக்கையில்

செயல்பட வேண்டாம். நாளை என்பது ஒருக்கால் உங்களுக்கு வராமலேயே போகலாம்.

***செய்தி: தீர்மானத்தின் நேரம்***

★★★★★



176. இப்பொழுது அவன் கதவண்டை நின்று, "வேளையானது சமீபமாய் உள்ளது. நான் உரைத்த தேவனுடைய வார்த்தையானது நிறைவேற்றப்படும்" என்று பகிரங்கமாக கூறினான். அது உண்மை. அவன் பேழைக்குள்ளாகச் சென்றான்.

177. அவன் பேழைக்குள்ளாக சென்றபொழுது, என்னவென்று உங்களுக்குத் தெரியுமா? தேவன் கதவை அடைத்தார். அதை அடைக்க ஒருவரும் இல்லாதிருந்தனர். தேவன் அதை அடைத்தார். எல்லாம் அவ்வளவுதான். இரட்சிக்கப்படுவதற்கான கடைசி தருணம் போய்விட்டது.

*செய்தி: தேவனுக்கும் சாத்தானுக்கும் இடையேயுள்ள போராட்டம்*

★★★★★



இது ஒருக்கால் உங்கள் கடைசி தருணமாயிருக்கலாம். வாலிபரானாலும் வயோதிபரானாலும், உங்களால் சபைக்கு வர முடிகிறது. எதையும் செய்யாமல் விட்டுவிடாதீர்கள். நீங்கள் ஆழமான உத்தமமுள்ளவர்களாயிருங்கள். பாவமனைத்தையும் மற்றவைகளையும் புறம்பே தள்ளிவிடுங்கள். தேவனுடைய முகத்துக்கு நேராக நோக்கி, "ஆண்டவரே, உம்மை நான் பிரீதிபடுத்துகிறேனா?" என்னும் கேள்வியைக் கேளுங்கள். "கர்த்தராகிய இயேசுவே, நான் வேறென்ன செய்ய முடியும்? இந்த வாழ்க்கை முடிவுற்ற பிறகு, உம்மைச் சேவிக்க எனக்கு வேறொரு தருணம் கிடைக்காது. கர்த்தராகிய தேவனே, எனக்கு கிடைக்கப் பெற்றுள்ள சமயம் இது ஒன்று மாத்திரமே. நான் என்ன செய்ய வேண்டும் என்று மட்டும் எனக்குத் தெரியப்படுத்தும். நான் சென்று இதை செய்ய வேண்டும், அதை செய்யவேண்டும் என்றால், நான் சந்தோஷமாக செய்வேன்" என்று சொல்லுங்கள்.

அதை நாம் உத்தமமாய் சிந்தித்துப் பார்க்கிறோமா? சிறுவர் அதை சிந்தித்துப் பார்க்கின்றனரா? நடுத்தர வயதுள்ளோர் அதை சிந்தித்துப் பார்க்கின்றனரா? வயோதிபர் அதை

சிந்தித்துப் பார்க்கின்றனரா? இளைஞர் அதை சிந்தித்துப் பார்க்கின்றனரா? நாமெல்லாரும் போக வேண்டும். நாளை காலை முன்பு நாம் எல்லோரும் போய்விட்டிருக்க மாட்டோம் என்று உங்களுக்கு எப்படித் தெரியும்? நமக்குத் தெரியாது. "அது என்னை கவலையில் ஆழ்த்துகிறது" என்று நீங்கள் கூறலாம். அது அவ்விதம் செய்யக் கூடாது. வெளிப்படையாய் கூறினால், இந்த பழைய பூச்சி அரிக்கும் வீட்டை விட்டுச் செல்வதற்கு நீங்கள் மகிழ்ச்சியடைய வேண்டும்.

*செய்தி: தேவன் ஒரு மனிதனை முதலில் எச்சரிக்காமல் அவனை நியாயத் தீர்ப்புக்குள் கொண்டு வருவதில்லை*

★★★★★



22. ஆகையால் நண்பனே, நீ ஒரு காரியத்தைச் செய்யாமல் விட்டுவிடாதபடி நிச்சயமுடையவனாயிரு. அது - அது ....... அது பலனளிக்காது. வெறுமனே ஒழுங்கற்ற விதமாய் அதனண்டைச் செல்லாதே. நிச்சயமுடையவனாயிரு, இரட்டிப்பான நிச்சயமுடையவனாயிரு, ஏனென்றால் உனக்கு மற்றொரு தருணம் கிடைக்கிறதில்லை. நீ இங்கே பூமியின் மேல் இருக்கும்போது, இதுவே உன்னுடைய தருணமாய் இருக்கிறது.

23. ஐசுவரியவானையும், லாசருவையும் நினைவில் கொள்ளுங்கள். அவனுக்கும் இவனுக்கும் இடையே எந்த மனிதனும் எப்போதும் கடந்திராத அல்லது எப்போதும் கடக்க முடியாதபடியான ஒரு பெரும் பிளவு இருந்தது. புரிகின்றதா? நீங்கள் மரிக்கும்பொழுது, அதுவே இதற்கு தீர்வாகிறது. அந்த இடங்களிலிருந்து அவர்கள் உங்களுக்கு ஜெபிக்கிறார்கள் என்று ஜனங்கள் உரிமை கோருவதை நான் அறிவேன். ஆனால் நீங்கள் அதை ஒருபோதும் நம்பவேண்டாம். அது தேவனுடைய வார்த்தைக்கு முரணானதாயிருக்கிறது. புரிகின்றதா? "மரமானது எப்பக்கமாக சாய்கிறதோ, சாய்கிறவிதமாகவே, அந்த விதமாகவே அது விழுகிறது". இயேசு

தாமே, "ஒரு பெரும் பிளவு இருந்தது என்றும், ஒரு மனிதன் மரித்து, நரகத்திற்கு சென்றுவிடும்போது, அவன் (ஒருபோதும்) பரலோகத்திற்கு வரவே முடியாது. எந்த மனிதனுமே அதை எப்போதுமே கடந்ததில்லை யென்றும், ஒருபோதும் அதை கடக்கவே முடியாது" என்றும் கூறினார், என்னைப் பொறுத்தமட்டில் அதுவே இதற்கு தீர்வாகிறது. இயேசு அது இவ்வாறு இருந்தது என்று கூறிவிட்டபோது அதைக் குறித்த யாவும் அவ்வளவுதான்.

24. ஆகையால் சற்று நினைவிருக்கட்டும். இப்பொழுது இது உங்களுடைய தருணமாயிருக்கிறது. இன்றிரவு இது உங்களுடைய கடைசி தருணமாயிருக்கலாம்.

*செய்தி: அடையாளத்தின் சத்தம்*

★★★★★

# உங்களை எச்சரிக்கை செய்யும் அந்த சத்தத்தை ஒருபோதும் அமைதிபடுத்தி அடக்கிப்போடாதீர்கள்



வில்லியம் மரியன் பிரன்ஹாம்

# செய்தி: **என்னைப் பின்பற்றி வா,**

ஜூன் 1, 1963, டூசான், அரிசோனா, அமெரிக்கா

104. அநேக வருடங்களுக்கு முன்பு, நான் உங்கள் எல்லாரையும் போன்று, சிறு பையனாய் இருக்கையில், இங்கே பினிக்ஸ்-க்கு மேற்பகுதியில் கால்நடைப் பண்ணையில் இருந்தேன். அப்போது ஒரு துண்டு காகிதத்தில், கனிம வளத்தைத் தேடும் ஒருவரைக் குறித்தும் (கனிம வளத்தைக் குறித்தும்) போடப்பட்டிருந்ததை வாசித்துக் கொண்டிருந்தேன். அப்போது, இது நெடுகிலும் சாலைகள் கிடையாது, வெறுமனே சிறிய மணல் பாதை தான் இருந்தது. அவர்கள் இன்னும் இங்கே கனிம வளத்தைக் குறித்து அநேக ஆராய்ச்சிகள் செய்து கொண்டிருக்கிறார்கள் என்று உங்களுக்குத் தெரியும்.

105. ஆனால் இந்தக் கனிம ஆராய்ச்சியாளர் இந்த இடத்திற்குள்

வந்திருந்தார், அவர் திரளான செல்வத்தைக் கண்டு பிடித்திருந்தார், எதிர்பாராதவிதமாக திரளான தங்கத்தையும் கண்டுபிடித்திருந்தார். அவருடைய பாதையில் அவர் கண்டுபிடித்திருந்த ஒரு சிறு அறையில் அவர் தங்கியிருந்தார். அவரோடு ஒரு நாயையும் வைத்திருந்தார், அந்த நாய் வெளிப்புறத்தில் கட்டப்பட்டிருந்தது.

அந்த இரவு வேளையில், இந்தத் தங்கத்தைப் பறித்துக் கொள்வதற்காக, கொள்ளைக்காரன் ஒருவன் *(outlaw)* அவரைப் பின்தொடர்ந்து வந்துகொண்டிருந்தான். அவர் தங்கத்தை அந்தப் பழைய ஸ்பானிஸ் சுரங்கங்களில் இருந்து கண்டு பிடித்து எடுத்திருந்தார், அவர் அதனோடு உள்ளே வந்திருந்தார். அந்த நாய் குரைக்கத் தொடங்கியது.

106. அந்த நாய் தொந்தரவுபடுத்துவதை அம்மனிதர் விரும்பவில்லை. அவர், "வாயை மூடு" என்றார். மேலும் அவர், "நாளை இதை நகரத்திற்குள் எடுத்துக் கொண்டு போய் விடுவேன்" என்றார். அந்த சம்பவத்தின்

நன்நடத்தை நீதி விஷயங்கள் *(morals)* இவைதான். "நான் இதை நிறுத்துப் பார்த்து இதன் எடையை அறிந்து கொள்வேன், (பிறகு) ஒரு பணக்காரன் ஆவேன். நான் பெரிய கார்களையும் வாங்குவேன். நான் எல்லாவிதமான பெண்களையும் பெரிய பார்ட்டிகளையும் கொண்டிருப்பேன். நான் ஒரு பணக்காரனாய் இருப்பேன், ஏனென்றால் நான் ஏற்கனவே உரிமைகோரிப் பெறப்பட்ட பொருளைக் கண்டுபிடித்திருக்கிறேன். இங்கே என்னிடம் நிறைய தங்கம் உள்ளது" என்றான். மேலும், "நான்... இருப்பேன்" என்றான்.

107. அவன் போய் தூங்க முயற்சிக்கையில், நாய் தொடர்ந்து குரைத்துக் கொண்டிருந்தது, ஏனென்றால் அந்தக் கொள்ளைக்காரன் *(outlaw)* பதுங்கி பதுங்கி வந்து கொண்டிருப்பதை அந்த நாய் பார்த்து விட்டது, அவன் இந்த கனிம ஆராய்ச்சியாளர் தூங்கப் போவதற்காகக் காத்துக் கொண்டிருந்தான்.

108. அவன் மீண்டும் எழுந்து, திரும்பவும் நாயைப் பார்த்து சத்தமிட்டு, "வாயை மூடு"

என்றான். அந்தப் பரிதாபமான நாய் ஊளையிட்டபடி, ஆபத்து நெருங்கிக் கொண்டிருக்கிறது – வேகமாக நெருங்கிக் கொண்டிருக்கிறது என்று தன்னுடைய எஜமானை எச்சரிக்கை செய்ய முயற்சித்தது. மேலும் அவன்...

109. அடுத்த முறை அந்த நாய் குரைக்கத் தொடங்கின போது, அந்த கனிம ஆராய்ச்சியாளன் ஒரு சிறு துப்பாக்கியை எடுத்தான். அவனுக்கு தொந்தரவு ஏற்படுவதை அவன் விரும்பவில்லை, எனவே அவன் எழுந்து அந்த நாயைச் சுட்டுத் தள்ளினான். அந்தக் கனிம ஆய்வாளன் அந்த இரவில் அந்தக் கொள்ளைக்காரனால் கொல்லப்பட்டான். அவனுடைய ஆடம்பர கனவுகள் எல்லாம் அவனுக்கு நன்மை ஒன்றும் செய்யவில்லை. ஏன்? அவனை எச்சரிக்கை செய்து கொண்டிருந்த அந்த சத்தத்தை அவன் அடக்கிப் போட்டான்.

110. வாலிப பிள்ளைகளே, நீங்கள் வளர்க்கப்பட்ட விதமாக வளர்க்கப்பட்ட பிறகு, தவறான காரியத்தைச் செய்யாதே என்று

ஏதோவொன்று கூறுவதை நீங்கள் உணருவது வரை, உங்களால் ஒருபோதும் தவறான எதையும் செய்ய முடியாது, யாருமே எதையும் செய்து பார்க்க அவர்களால் கூடாது. இப்பொழுது, உங்களை எச்சரிக்கை செய்யும் அந்த சத்தத்தை ஒருபோதும் அமைதிபடுத்தி அடக்கிப்போடாதீர்கள்.

111. இதை எப்போதுமே நினைவில் கொள்ளுங்கள், "என்னைப் பின்பற்றிவா" என்று கூறுகிற அந்த சத்தத்தை ஏற்றுக் கொள்ளுங்கள், அப்போது நீங்கள் எப்போதுமே சரியாக வெற்றி பெறுவீர்கள். நீங்கள் அவ்வாறு வெற்றி பெறுவீர்கள் என்று நான் விசுவாசிக்கிறேன். நான் உங்களை நம்புகிறேன். ஆனால் இயேசுவாகிய, அந்த சத்தமானது இன்றிரவும் பூமியில் ஜீவித்துக் கொண்டிருக்கிறது என்பதை எப்போதுமே ஞாபகம் கொள்ளுங்கள்.

★★★★★

# பத்தாயிரம் உலகங்கள் விலைமதிப்புள்ள ஒரு ஆத்துமாவை நீங்கள் அங்கே உள்ளே பெற்றிருக்கிறீர்கள்



**வில்லியம் மரியன் பிரன்ஹாம்**

20. இப்பொழுது, கவனியுங்கள். ஆனால் உலகமோ, அவர்கள், "நல்லது, நான் சபையைச் சேர்ந்தவன். நான் அசெம்பிளிஸ் சபையைச் சேர்ந்தவன். நான் நான்குசதுர (Foursquare) சபையைச் சேர்ந்தவன். என்னால் செய்யக்கூடிய சிறந்த காரியம் அங்கே தான் இருக்கிறது. அதை ஏற்றுக் கொள்ளும் அல்லது அதை விட்டு விடும்" என்று கூறுகிறார்கள். **நீங்கள் ஒரு தட்டு சூப்பை எடுத்து, அதில் ஒரு சிலந்தி கிடந்தால், அதைப் புசிக்கவே மாட்டீர்கள். அதை உங்களுக்குக் கொடுத்த நிறுவனத்தின் மீது வழக்குத் தொடுப்பீர்கள். அது உண்மை.** அது சரியே. நீங்கள் அதைச் செய்வீர்கள். **நீங்கள் எதற்காகவும் அதைப் புசிக்கவே மாட்டீர்கள். ஆனால் அப்படியே எந்தவிதமான ஒரு பழைய மதக்கோட்பாட்டையும் உங்கள் கழுத்துக்கு கீழாக உங்கள் ஆத்துமாவில் கடந்து செல்ல அனுமதிக்கிறீர்கள்.** அவை எல்லா வற்றிற்கும் பிறகு, எப்படியும் அந்த சரீரம் மரிக்கத்தான் போகிறது. அது உண்மை.

இங்கே கொஞ்ச காலத்திற்கு முன்பு, நான் ஒரு பொருட்காட்சி சாலையில் இருந்தேன், அவர்கள்

ஐம்பது பவுண்டுகள் எடையுள்ள - சரியாகச் சொன்னால் 150 பவுண்டுகள் எடையுள்ள ஒரு மனிதனைக் குறித்த பகுப்பாய்வை (analysis) வைத்திருந்தனர். அவனுடைய சரீரம் 84 காசுகள் (cents) பெறுமானமுள்ள ரசாயனங்களாகத் தான் இருந்தது. அது சற்றேறக்குறைய ஒரு கோழிக்கூண்டின் மேல் தெளித்து, அதை வெள்ளையடிக்கப் போதுமான அளவு கால்சியத்தையும் மற்றும் ஒவ்வொன்றையும் தான் கொண்டிருந்தது. அவனுடைய முழு எடையும் 84 காசுகள் (cents) விலைமதிப்புள்ளதாகவே இருந்தது. அங்கே இரண்டு பையன்கள் நின்று கொண்டு, ஒருவன் மற்றவனிடம், "ஜான், நமக்கு அதிக விலைமதிப்பு இல்லை, அப்படித்தானே?" என்றான்.

மற்றவன், "அது சரிதான்; நாம் அதிக விலைமதிப்புள்ளவர்கள் என்று நான் நம்பவில்லை" என்றான். நூற்றைம்பது பவுண்டுகளுக்கு விலை மதிப்பு 84 காசுகள் (cents) தான். இப்பொழுது, துவக்க முதலே நீங்கள் பெரியவர்களல்ல, அப்படித்தானே?

**ஆனால் அந்த 84 காசுகளை** (cents) **நீங்கள் அக்கறை எடுத்து கவனித்துக் கொள்வதில் நிச்சயமுடையவர்களாயிருக் கிறீர்கள். நீங்கள் அதன் மேல் ஒரு சிறு விலங்கின் மென்மயிரினால் செய்யப் பட்ட 500 டாலர்கள் விலைமதிப்புள்ள கோட்டை அணிந்து கொண்டு, உங்கள் மூக்கை நிமிர்த்திக் கொள்கிறீர்கள். மழை பெய்தால், அது உங்களை மூழ்கடித்து விடும்.** *அந்த 84 காசுகளை* (cents) *கவனிப் பதில் நீங்கள் உறுதியாய் இருக்கிறீர்கள்.* ஆம், ஐயா.

21. ஆனால் **பத்தாயிரம் உலகங் கள் விலைமதிப்புள்ள ஒரு ஆத்து மாவை நீங்கள் அங்கே உள்ளே பெற்றிருக்கிறீர்கள், அதில் எதையும் திணிப்பதற்கு நீங்கள் பிசாசை அனும தித்து, அதைக் குறித்து தேவனுடைய சரியான வழியை எடுத்துக் கொள்வ தற்குப் பதிலாக, அதை நீதி என்றும், பக்தி என்றும் அழைத்துக் கொள்கி**

**நீர்கள்.** அது உண்மை. **உங்கள் ஆத்துமா பத்தாயிரம் உலகங்கள் விலைமதிப்புடையது. உங்களுடைய சரீரமோ 84 காசுகள்** (cents) **மாத்திரமே விலைமதிப்புடையது. நீங்கள் அதை சுற்றிலும் இழுத்துக் கொண்டு சென்று, அதைக் கவனிப்பதிலேயே உறுதியாயிருக்கிறீர்கள். ஓ, நீங்கள் அதை சவரம் பண்ணி, அதைச் சரியாக சிங்காரித்து, ஆனால் என்னே, அதற்கு அருமையாக உடையுடுத்திக் கொள்கிறீர்கள். ஆனால் அந்த ஆத்துமாவுக்கு வஸ்திரம் தரிக்க நீங்கள் உறுதியற்றவர்களாய், இஸ்டமான எதையும் அதன் வழியாக இழுக்க அனுமதிக்கிறீர்கள்.** அதில் ஒரு சிலந்தியோடு உங்களிடம் கொடுப்பார்களானால், அதை உங்களுக்குக் கொடுத்த உணவுவிடுதி மீது வழக்குத் தொடுப்பீர்கள்.

*செய்தி: மிருகத்தின் முத்திரையும் தேவனுடைய முத்திரையும், பாகம் - 2, பிப்ரவரி 17, 1961*

★★★★★

# ஓ, எச்சரிப்பை ஏற்றுக் கொள்வது நன்மை பயக்கும்!



வில்லியம் மரியன் பிரன்ஹாம்

# செய்தி: **வருகின்ற புயல்**

Phoenix, Arizona, USA
60-02-29

16. இப்பொழுது நாம் வேகமாக நமது வேதாகமங்களை பரி. மத்தேயு 7ம் அதிகாரம் திருப்பி 24ம் வசனம் முதல் வாசிப்போம்.

**ஆகையால், நான் சொல்லிய இந்த வார்த்தைகளைக் கேட்டு இவைகளின்படி செய்கிறவன் எவனோ, அவனைக் கன்மலையின் மேல் தன் வீட்டைக் கட்டின புத்தியுள்ள மனுஷனுக்கு ஒப்பிடுவேன்.**

**பெருமழை சொரிந்து, பெருவெள்ளம் வந்து, காற்று அடித்து அந்த வீட்டின் மேல் மோதியும், அது விழவில்லை; ஏனென்றால், அது கன்மலையின் மேல் அஸ்திபாரம் போடப்பட்டிருந்தது.**

**நான் சொல்லிய இந்த வார்த்தைகளைக் கேட்டு, இவைகளின்படி செய்யாதிருக்கிறவன் எவனோ, அவன் தன் வீட்டை மணலின் மேல் கட்டின**

**புத்தியில்லாத மனுஷனுக்கு ஒப்பிடப்படுவான்.**

**பெருமழை சொரிந்து, பெருவெள்ளம் வந்து காற்று அடித்து அந்த வீட்டின் மேல் மோதினபோது அதுவிழுந்தது; விழுந்து முழுவதும் அழிந்தது என்றார்.**

**மத். 1:24-27**

17. வாசிக்கப்பட்ட அவருடைய வார்த்தையுடன் தேவன் தமது ஆசீர்வாதங்களைக் கூட்டுவாராக. நான் வருகின்ற புயல் என்னும் பொருளின் பேரில் சிறிது நேரம் பேச விரும்புகிறேன். நாம் பரிசுத்த ஆவிக்கு நம்மை ஒப்புக்கொடுக்க தேவன் மேல் நம்பிக்கையாயிருக்கிறேன். நான் ஒரு பிரசங்கி அல்ல என்று எவருமே அறிவர். எனக்குப் பின்னால் பிரசங்கிமார்கள் உட்கார்ந்து கொண்டிருக்கிறனர். ஒரு போதகனாவதற்கு வேண்டிய கல்வியை நான் பெற்றிருக்கவில்லை. ஆனால் என் பழைய, மெள்ள பேசும் முறையின் மூலம்... வேறொன்றைச் செய்ய வேண்டுமென்று தேவன் எனக்குத் தந்திருக்கிறார். ஆனால்

நான் நேரத்தை எடுத்துக் கொண்டு, நான் கர்த்ரைக் குறித்தும், அவருடைய அருமையான தன்மையைக் குறித்தும் மற்றவர்களுக்கு எடுத்துரைக்க எனக்குப் பிரியம். இன்றிரவு நாம் வருகின்ற புயல் என்பதைக் குறித்து பேசிக் கொண்டிருக்கிறோம். என் இருதயத்திலுள்ளதை சொற்களால் விவரிக்க நான் தவறினால், பரிசுத்த ஆவியானவர் அதை வெளிப்படுத்தித் தர வேண்டுமென்று ஜெபிக்கிறேன்.

18. **இவ்வுலகில் பிறந்த ஒவ்வொரு மனிதனையும் ஸ்திரீயையும் தாக்க வேண்டிய புயல் ஒன்று வந்து கொண்டிருக்கிறது என்று இயேசு கூறினார். அதிலிருந்து தப்பிக்க வழியேயில்லை. எப்பொழுதாவது உங்களையும் அந்த புயல் தாக்கும். உங்கள் வீடு அதைத் தாங்குமா இல்லையா என்பது நீங்கள் எப்படிப்பட்ட அஸ்திபாரத்தைப் பெற்றிருக்கிறீர்கள் என்பதைப் பொறுத்தது.**

வரப்போகும் புயலுக்கு ஆயத்தப்பட்டதன் விளைவாக எத்தனையோ உயிர்கள் காக்கப்பட்டுள்ளன. புயல் வரப் போகிறது

என்னும் எச்சரிப்புக்கு செவி கொடுக்காததன் விளைவாக எத்தனையோ உயிர்கள் நாசமடைந்தும் உள்ளன.

19. அண்மையில் நடந்த ஒரு சம்பவத்தைக் குறித்து கேள்விப்பட்டேன். அதை பிளாரிடாவில் ஒரு செய்தித்தாளில் படித்தேன்.

பிளாரிடாவை பல புயல்கள் தாக்கியுள்ளன. கடல் கொந்தளித்து, அலைகள் எழும்பி, தண்ணீர் நகருக்குள் நுழைந்து எல்லாவற்றையும் அடித்துக் கொண்டு சென்றுள்ளது. வான்நிலை முன்னறிவிப்பாளர்கள் இப்படிப்பட்ட புயல்களை கவனித்துக் கொண்டே வருவார்களாம். எப்படியோ அவர்கள் வான் நிலையிலும் ஆகாய மண்டலத்திலும் ஏற்படும் மாறுதல்களை அறிந்து, புயல்களைத் தோன்றச் செய்யும் வான்நிலை எந்தப் பக்கம் உருவாகின்றது என்பதை கண்டு கொள்கின்றனர். அவர்கள் வாழ்க்கை பூராவும் இவ்வாராய்ச்சியில் ஈடுபட்டு, விஞ்ஞானம் அவர்களுக்கு அளித்துள்ள குறிப்பிட்ட கருவிகளின் மூலம் அவர்கள் அதை முன்

கூட்டி அறிவித்து, எந்தப் பக்கம் புயல் வந்து கொண்டிருக்கிறதென்றும், அதன் காற்றின் வேகம் எவ்வளவென்றும், மற்ற புயல்கள் எந்தப் பக்கம் வருகிறதென்றும், அதன் காற்றுகளின் வேகம் எவ்வளவென்றும் இவை அந்த புயலை தடுத்து பின்னால் தள்ளிவிடக் கூடுமா என்னும் விவரங்கள் அனைத்தையும் அளிக்கின்றனர்.

20. இங்கு நான் நிறுத்திக் கொண்டு, அந்த புயலைத் திசை திருப்ப அதைக் காட்டிலும் வல்லமையான புயல் அவசியம் என்பதைக் குறித்து ஒரு மணிநேரம் பிரசங்கிக்கக் கூடும். இன்று அப்படித்தான் உள்ளது! வரப்போகும் புயல் ஒன்றுண்டு என்று நாமெல்லாரும் அறிவோம். அந்த புயலைத் திசை திருப்பக் கூடிய எனக்குத் தெரிந்த ஒரே காற்று, பெந்தெகொஸ்தே நாளன்று விழுந்த பலத்த இடி முழக்கம் போன்ற காற்று மாத்திரமே. இப்பொழுதும் கம்யூனிஸத்துக்கு விரோதமாக பேசும் மக்கள் நகரில் இருப்பதாக கேள்விப்படுகிறேன். அப்படி இருக்க வேண்டும். ஆனால் அதற்கு

விரோதமாக பேசினால் மாத்திரம் போதாது, அதை எப்படி திசை திருப்புவது என்பதை நாம் கண்டுபிடிக்க வேண்டும். அந்த புயலைத் தள்ளி அதை திசை திருப்புவதற்கு அதைக் காட்டிலும் வல்லமையான புயல் ஒன்றுண்டு.

21. பிளாரிடாவிலுள்ள வான்நிலை முன்னறிவிப்பாளர்கள் பிழையின்றி கிரமமாக முன்னறிவிப்பவர்கள். அந்த நோக்கத்துக்காகவே – ஜனங்களை எச்சரிக்க வேண்டும் என்பதற்காகவே – அவர்கள் அமர்த்தப்பட்டுள்ளனர்.

சில ஆண்டகளுக்கு முன்பு மத்திய பிளாரிடாவைக் கடந்து சென்ற ஒரு புயலைக் குறித்து நான் படித்தேன். அதை எங்கு படித்தேன் என்று மறந்து விட்டது, செய்தித்தாளில் என்று நினைக்கிறேன். ஒக்கி சோபியைச் சுற்றிலுமிருந்த வட்டாரங்களுக்கு எச்சரிக்கை விடுக்கப்பட்டது. நான் ஐந்து வாரங்களுக்கு முன்பு அங்கிருந்து வந்தேன். அண்டை வீட்டிலிருந்த ஒருவர் வானொலியில் புயல் அறிவிப்பைக் குறித்து எப்பொழுதும் கேட்டுக் கொண்டிருந்தார். அவர் பிரபலம்

வாய்ந்த கிறிஸ்தவர். மரங்களை விழச் செய்யக் கூடிய ஒரு பெரிய புயல் வந்து கொண்டிருக்கிறது என்று அவர் வானொலியில் கேட்டார். எல்லோரும் பாதுகாப்பான இடத்தை அடைய வேண்டுமென்று எச்சரிக்கப்பட்டனர்.

கோழிப் பண்ணை வைத்திருக்கும் அண்டை வீட்டிலுள்ள ஒருவர் அவருக்கு ஞாபகம் வந்தது. அவருடைய கட்டிடங்கள் இலேசானவை. அதில் கோழிக்குஞ்சுகளை அவர் வைத்திருந்தார். அடைகாக்கும் வீடுகள், கோழிகளை அடைக்கும் இடங்கள் எல்லாமே அங்கிருந்தன. அவர்களுடைய ஜீவனாம்சமே கோழிகளின் மேல் சார்ந்திருந்ததால், அவர் பதறிப்போய் வேகமாக அந்த வாசல் வரைக்கும் சென்று காரை நிறுத்தி அவரிடம், "உங்கள் கோழிக்குஞ்சுகளை எல்லாம் புயலுக்கு ஒதுங்குமிடத்தில் (storm shelter) வைத்துவிட்டு, என் வீட்டுக்கு வந்துவிடுங்கள். ஏனெனில் எல்லாவற்றையும் முறுக்கி கீழே தள்ளக் கூடிய புயல் ஒன்று வந்து கொண்டிருக்கிறது" என்றார்.

22. அந்த மனிதனோ அவருடைய முகத்தை நோக்கி கேலியாக சிரித்து, "மூடத்தனம்! இப்படி அவர்கள் அநேகந்தரம் முன்னறிவித்ததை நான் கேட்டிருக்கிறேன். ஆனால் ஒன்றும் நடக்கவில்லை" என்றார்.

இந்த கிறிஸ்தவ அண்டை வீட்டுக்காரர் மிகவும் உணர்ச்சிவசப்பட்டு, "ஒருக்கால் அப்படி நடந்தால் என்ன கதி?" என்றார்.

நாமும் கூட, "இது நடக்கப் போகிறது, அது நடக்கப் போகிறது என்று மற்றவர் கூறக் கேட்டிருக்கிறேன்" என்று கூறப்படுவதை கேட்டிருக்கிறோம். **ஆனால் என்றாகிலும் ஒரு நாளில் அது நிச்சயம் நடந்தே தீரும். எனவே ஒவ்வொரு எச்சரிப்பின் சத்தத்துக்கும் நாம் செவி கொடுக்க கடமைப்பட்டிருக்கிறோம்.**

23. ஆனால் இந்த மனிதன், "இப்படிப்பட்ட மூடத்தனத்திற்கு எனக்கு நேரமில்லை. நான் கோழிக் குஞ்சுகளை வளர்க்கிறேன். இப்படிப்பட்டவைகளுக்கு எனக்கு நேரமில்லை" என்று கூறிவிட்டார்.

அந்த அண்டை வீட்டார் கெஞ்சினார்; “ஜான், நீ கோழிக் குஞ்சுகளை வேண்டுமானால் விட்டு விட்டு, நீயும் உன் வீட்டாரும் வேகமாக வந்து விடுங்கள் என்று தேவனின் நாமத்தில் கேட்டுக் கொள்கிறேன். நீ நம்பாவிட்டால், உன் குடும்பத்தாரையாகிலும் அனுப்பி வை.

அவரோ, “ஒரு சில வானொலி எச்சரிப்பின் காரணமாக என் பிள்ளைகள் உணர்ச்சிவசப்பட விடமாட்டேன். நானும் என் பிள்ளைகளும் இப்பொழுது நாங்கள் வாழ்கின்ற விதமாகவே வாழ்வோம் என்று தீர்மானித்து விட்டோம். என் மனைவி நான் சொல்வதை மாத்திரமே கேட்பாள். ஏனெனில் இந்த குடும்பத்துக்கு ஆகாரம் தருபவன் நானே. அவள் நான் சொல்வதற்கு கீழ்ப்படிய வேண்டும். நான் தான் இங்கு அதிகாரி. எனவே மூடத்தனமான ஏதோ ஒன்றைக் குறித்து என் பிள்ளைகள் உணர்ச்சிவசப்பட விடமாட்டேன்” என்றார்.

அந்த அண்டை வீட்டார் துரத்தப்பட்டார். அவர் வீடு திரும்பி பாதுகாப்பான இடத்தில் புகுந்து கொண்டார்.

24. திடீரென்று, என்ன நடக்கிறதென்று அவர்கள் அறிவதற்கு முன்பே, மேகங்கள் அவர் மேல் வந்தன. **அப்படித்தான் நியாயத்தீர்ப்பும் விழுகிறது. அது திடீரென்று வரும். அது எப்படி அவ்வளவு வேகமாக வந்ததென்று நீங்கள் ஆச்சரியப்படுவீர்கள்.** தேவனை தூஷித்த கொடூர மனிதர்கள் கீழே விழுந்து, "நீர் எப்படி என்னை இவ்வாறு நடத்தலாம்?" என்று கூச்சலிடுவதை நான் கண்டிருக்கிறேன். அவர்களுக்கு கீழிருந்த அஸ்திபாரம் ஒரு நொடிப் பொழுதில் அழிந்துவிட்டது. எச்சரிப்பை ஏற்றுக் கொள்வதனால் நன்மை பயக்கும்.

ஓ, நீங்கள் செய்தியாளனை நோக்கி ஏளனமாக சிரிக்கலாம், அவனைக் கொல்லவும் செய்யலாம். ஆனால் செய்தியை நீங்கள் கொல்ல முடியாது. அது அப்படியே சென்று கொண்டிருக்கும். தேவனுடைய செய்தி

நித்தியமானது. அவருடைய வார்த்தைகள் ஒருபோதும் தவறாது.

பவுல் ஸ்தேவானை கல்லெறிந்து கொன்ற விஷயத்தில் வெற்றி கண்டான். ஆனால் அவனுடைய வாழ்க்கை பூராவும் அவன் இயேசுவுக்குத் தன்னை ஒப்புவிக்கும் வரைக்கும், "வானங்கள் திறந்திருக்கிறதையும், இயேசுவானவர் தேவனுடைய வலது பாரிசத்தில் நிற்கிறதையும் காண்கிறேன்" என்னும் அச்செய்தியை விட்டு அவனால் விலகவே முடியவில்லை. ஏதோ ஒன்று அவனைப் பற்றிக்கொண்டது. அது செய்தியாளன் அல்ல, அவன் பெற்ற செய்தி.

25. புயல் நகரைத் தாக்கினபோது. அது கோழிப் பண்ணையையும், பண்ணை சொந்தக்காரரையும் அழித்து போட்டது. அவருடைய உடலைக் கண்டு பிடிக்கவே முடியவில்லை.

அவருடைய மனைவி முழு மூச்சுடன் போராடினாள். அவர்கள் ஓக்கிக்சோபி ஏரியின் அருகில் வசித்தனர். புயல் ஏரியின் தண்ணீரை ஆழத்திலிருந்து மேலே உயர்த்தினது.

அதுதான் ஆபத்தை விளைவிக்கிறது. அலைகளுக்கு ஆழமில்லை. படகுகள் அசைகின்றன. அலைகள் எழும்பி படகுகளை தலைகீழாக கவிழ்த்துவிடுகின்றன. புயல் வரும்போது அது தண்ணீரை அநேக மைல்கள் சுழலும்படி செய்கிறது. தண்ணீர் அலையாக எழும்பினதை தாய் கண்டபோது, அவள் பிள்ளைகளை கட்டிடத்தின் உச்சிக்கு கொண்டு செல்வதைத் தவிர வேறு வழியில்லை என்று அறிந்து, வீட்டின் புகைக் கூண்டைப் பிடித்துக்கொண்டு அவர்களை கட்டிடத்தின் உச்சிக்கு ஏற்றினாள்.

26. அப்பொழுது கட்டுவிரியனைக் காட்டிலும் அதிக விஷமுள்ள பாம்புகள் பாதுகாப்பை தேடி ஊர்ந்து வீட்டின் கூரையை அடைந்தன. அவள் கணவனின் பேச்சைக் கேட்டு எச்சரிப்புக்கு செவி கொடாததன் விளைவாக... அவள் மிதித்தாள், அடித்தாள். ஆனால் அந்த விஷப்பாம்புகள் தன் பிள்ளைகளை கடித்து அவர்கள் கூரையில் உயிரழப்பதை அவள் நின்று காணவேண்டிய நிலைமை ஏற்பட்டது. முடிவில் அவளும்

விஷப்பாம்பினால் கடிக்கப்பட்டு உயிரிழந்தாள். இப்படித்தான் . இந்த வரலாறு வெளியிடப்பட்டிருந்தது. புயல் நீங்கின பிறகு, தேடும் குழுக்கள் சடலங்களைச் தேடிச் சென்றபோது, அவள் தன் பிள்ளைகளுடன் இறந்து கிடப்பதை அவர்கள் கண்டனர்.

## 27. ஓ, எச்சரிப்பை ஏற்றுக் கொள்வது நன்மை பயக்கும்!

முதலாவதாக எச்சரிப்பு அளிக்கப்படுவதற்கு முன்பே, பாதுகாப்பான ஒரு இடம் ஆயத்தம் பண்ணப்பட வேண்டும். இல்லையென்றால் எச்சரிப்பு அனுப்பியும் பயனில்லாமல் போகும். எச்சரிப்பு என்பது ஆபத்துக்கு தப்புவிக்க உங்களை ஆயத்தம் பண்ணும் சத்தமாகும். முதலாவதாக ஆயத்தம் இருக்கவேண்டும். ஆயத்தம் பண்ணப்பட்ட பின்பு, நீங்கள் செவி கொடுப்பீர்களா இல்லையா என்று தீர்மானம் செய்வதற்கு எச்சரிப்பு புறப்பட்டு செல்கிறது. **உங்களுக்கு செவிகொடுக்க விருப்பம் இல்லையென்றால், அது உங்களைப் பொறுத்தது. நீங்கள் செவி கொடுத்தால் உங்களுக்கு பாதுகாப்பு உண்டு.**

28. தேவனும் அதே முறையைக் கையாளுகிறார். நாங்கள் தேவனுடைய முறையை ஆதாரமாகக் கொண்டு பணிபுரிகிறோம். பூர்வ நாட்களில் தேவன், ஜலப்பிரளயத்துக்கு முன்னால் இருந்த உலகத்தில் ஜனங்கள் மிகவும் பொல்லாதவர்களாயும் பாவமுள்ளவர்களாயும் இருந்தபோது, தேவன் அதை காணாதவராக இருந்து, அதே சமயத்தில் நீதியுள்ளவராக இருக்கமுடியாது...

தேவன் நீதியுள்ளவர், அவருக்கு பிரமாணங்கள் உண்டு. அந்த பிரமாணங்கள் மீறப்படும் போது... தண்டனை இல்லாத எந்தப் பிரமாணமும் பிரமாணம் ஆகாது. **நீங்கள் தேவனுடைய பிரமாணங்களை மீறி அதற்கான கிரயத்தை எங்காவது செலுத்தாமல் இருக்கமுடியாது. நீங்கள் செலுத்தியே தீரவேண்டும்.** “**உங்கள் பாவம் உங்களைத் தொடர்ந்து பிடிக்கும்**” என்று வேதம் கூறுகின்றது.

# நித்தியத்தை நீ எங்கே கழிப்பாய்?










வில்லியம் மரியன் பிரன்ஹாம்

14. ஆபிரகாமின் பேரிலான அவைகளிலிருந்து நான் பெற்றுக்கொள்ளும், இந்தச் செய்திகளை நானே மகிழ்ச்சியோடு அனுபவித்து வருகிறேன். அது...?... நீங்கள் அதை அனுபவித்துக் கொண்டிருக்கிறீர்களா? ஆபிரகாம். அதை அணுகிக் கொண்டிருக்கையில், நீங்கள் என்ன சொல்லப் போகிறீர்கள் என்று எனக்குத் தெரியவில்லை, ஏனென்றால் பரிசுத்த ஆவியானவர் ஒரு காரியத்திலிருந்து மற்றொரு காரியத்திற்கு வழிநடத்துகிறார். நாம் நிச்சயமாகவே அதை அனுபவித்துக் கொண்டிருக்கிறோம். நாம்... கடந்த இரவு... சென்ற இரவுக்கு முந்தின இரவு, அவன் தேவனால் அழைக்கப்பட்ட போது, அவனை நாம் கொண்டிருந்தோம். சென்ற இரவு, நாம் அவனைக் கண்டபோது, -லிருந்து தன்னைத்தானே வேறுபிரித்துக் கொண்டான், முழுமையான கீழ்ப்படிதல். நீங்கள் தேவனுக்கு முற்றிலுமாக கீழ்ப்படியும் வரையில், நீங்கள் ஆசீர்வதிக்கப்படவே மாட்டீர்கள் என்றும், தேவனால் உங்களுக்காக எதையும் செய்ய முடியாது என்பதையும் நாம் கண்டுகொண்டோம்.

15. இப்பொழுது, வியாதியஸ்தரிடம் நான் கூறும்படியான ஒரு சிறு அறிவுரை இருக்கிறது.

நீங்கள் ஜெபிக்கப்படும்படி, இங்கே வரலாம்; உங்கள்மேல் கரங்களை வைக்கும்படியாக தூதர்கள் உங்களுக்கு இருக்கலாம், நீங்கள் முதலில் அதை விசுவாசித்து, அதை ஏற்றுக்கொண்டு, அதை அறிக்கை செய்யும் வரைக்குமாக, அது ஒருபோதும் உங்களுக்கு ஒரு காரியத்தையும் செய்யாது. அவர் நம்முடைய அறிக்கையின் பேரில் பிரதான ஆசாரியராக இருக்கிறார். அவர் அதை தேவனுக்கு முன்பாக சாட்சியமாகக் கூறுவதற்கு முன்பு, முதலில் நீங்கள் அதை அறிக்கை செய்தாக வேண்டும். அவர் நமக்காக என்ன செய்திருக்கிறார் என்ற நம்முடைய அறிக்கையின் பேரில் பரிந்து பேசும்படியாக அவர் அங்கே பிரதான ஆசாரியராக இருக்கிறார்.

இப்பொழுது, தெய்வீக சுகமளித்தல் என்றால் என்ன? சுகமடையும்படி நாளை இரவு வரைக்கும் நாம் காத்துக்கொண்டிருக்க வேண்டும் என்றா இப்பொழுது அதற்கு அர்த்தம்? இல்லை, ஐயா. நான் சபைக்கு வர வேண்டுமா? இல்லை, ஐயா. நீங்கள் தேவனை விசுவாசித்து, அதை உங்கள் தனிப்பட்ட சொத்தாக ஏற்றுக்கொள்ளும் அந்த கணமே, அது சரியாக அப்போதே முடிந்து விட்டது. அது சரியே. "சகோதரன் பிரன்ஹாம் அவர்களே, நான் எப்போது சுகமடைந்தேன்? நான்

சென்ற வாரம் இரட்சிக்கப்பட்டேன், சென்ற இரவுக்கு முந்தின இரவு, பத்து வருடங்களுக்கு முன்பு, நான் இரட்சிக்கப்பட்டேன்.” இயேசு உங்களுக்காக கல்வாரியில் மரித்த போதே, 1900 வருடங்களுக்கு முன்பே நீங்கள் இரட்சிக்கப்பட்டு விட்டீர்கள். உங்களுக்காக தேவன் வைத்திருக்கிற ஒவ்வொரு மீட்பின் ஆசீர்வாதங்களும்... இயேசு சிலுவையில், “அது முடிந்தது” என்று கூறினார். எல்லாவற்றிற்குமே கிரயம் செலுத்தப்பட்டு விட்டது.

நீங்கள் அடகு கடையில் இருந்தது போன்று, அப்போது தேவன் வந்து உங்களை வெளியே கொண்டு வருகிறார். ஓ, அதிலுள்ள அழகான பாடம். நாம் அடுத்த வாரத்தில் ரூத் மற்றும் நகோமியைக் குறித்த, இனத்தான் மீட்பர் (kinsman redeemer) என்ற காரியத்திற்கு வரலாம். அது ஒரு அழகான பாடமாகும். அநேக... முழு வேதாகமமும் அழகாயுள்ளது, அது தேவனுடைய வார்த்தையாக இருப்பதால், அப்படியே அதிலுள்ள எல்லாமே அழகாக இருக்கிறது.

இப்பொழுது, உங்களால் உங்கள் சுகத்தையோ அல்லது உங்கள் இரட்சிப்பையோ ஏற்றுக்கொள்ள முடியும் அந்தக் கணமே, நீங்கள் தெருவில் நடந்து கொண்டிருந்து, நீங்கள் - நீங்கள் எங்கே

இருந்தாலும், நீங்கள் அதை ஏற்றுக்கொள்ளும் அந்த கணமே, அது நீங்கள் மறுபக்கமாகத் திரும்பும் போதுதான்.

16. நான் ஏறக்குறைய ஒரு வருடத்திற்கு முன்பு, என்னுடைய முற்றத்தில் புல்லை வெட்டிக் கொண்டிருந்தேன் - நான் முயற்சித்துக் கொண்டிருந்தேன், சிலசமயங்களில் நீங்கள் என்னுடைய தளர்த்தியான மேலாடைகளை அணிந்து, ஒருசில சுற்றுகள் வெட்ட வேண்டியிருக்கும்; அப்போது யாரோ ஒருவர் உள்ளே வருவார், உடனே நீங்கள் போய் அவர்களுக்காக ஜெபிக்க வேண்டியிருக்கிறது. பின்பக்க வாசலில் வெளியே சென்று, மாற்றிவிட்டு, திரும்பி வர வேண்டியதாக இருக்கும். நான் பெட்ரோலை வெறுமையாக்கியிருந்தேன், எனவே நான் முன் தாழ்வாரத்தின் மேல் போகத் துவங்கினபோது, வீட்டின் முன்பு அதிக எடை உபயோகிக்கப் பட்டதால் சேதமடைந்திருந்த ஒரு பழைய பாரவண்டி நிறுத்தப்படுவதைக் கண்டேன், அங்கே அந்தச் சிறு வண்டிப்பாதையில் நற்குடி பண்பாளர்கள் (gentlemen) நடந்து மேலே வந்து கொண்டிருந்தார்கள். அவர், "நான் சகோதரன் பிரன்ஹாமைத் தேடிக் கொண்டிருக்கிறேன்" என்றார்.

அதற்கு நான், "நான் தான் சகோதரன் பிரன்ஹாம்" என்றேன். அவர் அந்த தளர் பணி மேலாடைகளையும் மற்றும் எல்லாவற்றையும் பார்த்துவிட்டு, "ஆம், ஐயா" என்றார்.

நான், "அது சரி" என்றேன்.

எனவே அவர், "நல்லது, சகோதரன் பிரன்ஹாமே, நான் ஒருகணம் உம்மைக் காண விரும்பினேன்; நீர் வேலையில் மும்முரமாக இருக்கிறீர் என்று நினைக்கிறேன்" என்றார்.

நான், "கர்த்தரைக் குறித்துப் பேசும்படிக்கு நான் ஒருபோதும் மிக பிஸியாக இருப்பதேயில்லை" என்றேன். அவர், "நல்லது..." என்றார்.

நான், "நீர் உள்ளே வர மாட்டீரா?" என்றேன்.

அவர், "இல்லை, நான் வெறுமனே இங்கே இந்த முன் தாழ்வாரத்திலேயே உட்காருகிறேன்" என்றார்.

17. அவர், "சகோதரன் பிரன்ஹாமே..." என்றார், அவர் எங்கிருந்து வருகிறார் என்று என்னிடம் சொன்னார், அவர், "நான் ஒரு லூத்தரனாகப் பிறந்து, அர்ப்பணிப்பட்டேன், அல்லது பிரதிஷ்டைபண்ணப்பட்டேன், அல்லது

அவர்கள் அதை எவ்வாறு அழைத்தாலும், அவ்வாறு செய்யப்பட்டேன். என்னுடைய அம்மா என்னை சில சமயம் சபைக்கு அழைத்துக்கொண்டு சென்றாலன்றி, எனக்கு தெரிந்த வரைக்கும், நான் எப்பொழுதாவது சபைக்கு கடைசியாகப் போனது, ஒரு சிறு பையனாக இருந்த போதுதான் என்று நினைக்கிறேன், எனக்கு அதைக் குறித்து எதுவும் தெரியாதிருந்தது. பிறகு நான் விவாகம் பண்ணினேன்" என்று கூறினார், அவர் மிகவும் அருமையான ஒரு வணிகவியாபாரம் செய்பவராக இருந்தார். அவர், "எனக்கு நிறைய காரியங்கள் இருந்தன, ஏராளமான - அருமையான கார் வியாபாரம், நான் நிறைய பணம் சம்பாதித்தேன். ஒருநாள் என்னுடைய மனைவி பெந்தெகோஸ்தேகாரர்களிடம் சென்றாள்" என்றார். அவர் அதைச் செய்தவிதமாகவே அதை நான் எடுத்துக் கூறப் போகிறேன், அவர், "அவள் பெந்தெகோஸ்தேகாரர்களிடம் சென்று, அந்த ஆவிகளை அவள்மேல் பெற்றுக்கொண்டாள். அவள், அவளுக்கு ஒரு-ஒரு நல்ல ஜீவியம் இருந்தது. அவள் என்னிடம் வந்து, நான் போய் அந்த ஆவிகளை என்மேலும் பெற்றுக்கொள்ளும்படி செய்ய முயன்றாள். நானோ, 'வேண்டாம், தேனே, நீ போக விரும்பினால்,

எப்படியும் தொடர்ந்து போ, இப்பொழுது, ஞாபகம் கொள், நீ உன்னுடைய ஜீவியத்தை மாற்றிக் கொண்டு இருப்பாயானால்...' என்றேன். நாங்கள்-நாங்கள் ஒரு சாதாரணமான அமெரிக்க வாழ்க்கையை தான் வாழ்ந்தோம், பழச்சாறுகளோடு அநேகவித மதுபானங்களையும் கலந்து குடிக்கும் விருந்து கொண்டாட்டங்களும், நடனங்களும், குடித்துவெறித்தலும், மற்ற எல்லாமும் கொண்டவர்களாகத்தான் இருந்தோம். அவள் நல்லவளாக நடந்துகொள்வதைக் கண்டு மகிழ்ச்சியடைந்தேன். அவள் நேராக்கப்பட்டாள்; அது அவளை ஒரு வித்தியாசமான நபராக ஆக்கினது. நான், "நல்லது, அவள் அவ்விதம் நடந்து கொள்வாளானால், அவள் அவ்விதம் ஆகியிருப்பதால், நான்-நான் மிகவும் சந்தோஷப்படுகிறேன்" என்று எண்ணினேன். "இப்பொழுது, உன்னிடம் காசோலை புத்தகம் இருக்கிறது, உன்னுடைய சிறிய சபைக்கு எந்த நேரத்திலாவது எந்தப் பணமாவது தேவைப்படுமானால், என்னுடைய பெயரைப் போலவே, உன்னுடைய பெயரும் ஒரு காசோலையின் மேல் அவ்வளவு நன்றாகவே இருக்கிறது. ஆனால் எனக்கோ, நான்-நான் மதசம்பந்தமானவன் அல்ல. நீ மத சம்பந்தமான

ஈடுபாடுடையவளாக இருக்க விரும்பினால், தொடர்ந்து செல்" என்று கூறினேன்.

18. "நல்லது, அவள் ஏறக்குறைய ஒரு வருடம் அந்தச் சிறிய சபையில் இருந்தாள். அவர்கள் டென்னஸியில் ஒரு கன்வென்சன் கூட்டத்தை உடையவர்களாக இருந்தார்கள்" என்றார். எனவே அது தீர்க்கதரிசனத்தின் சர்ச் ஆப் காட் சபை என்று நினைக்கிறேன்; அங்கு தான் அவர்கள்-அவர்கள் தங்களுடைய கன்வென்சன் கூட்டங்களை உடையவர்களாக இருக்கிறார்கள். எனவே அவர் தொடர்ந்து, "அவள் அங்கு மேலே போனாள். நான் ஒரு காரை விற்பனை செய்து கொண்டிருந்தேன், ஒரு-வெளியில் நிறைய, சில பெண்களுக்கு அதை விற்றுக்கொண்டிருந்தேன். நான் கோடை காலத்தில், என்னுடைய கோட்டை அணிந்துகொண்டு, என்னுடைய விற்பனையை செய்யும்படியாக, அவர்களுக்கு முன்னால் நடந்து சென்றேன். நான் திரும்பி வந்தபோது, நான் இவ்வாறு சிந்திக்க நேர்ந்தது, அந்த இரண்டாவது கொத்து திறவுகோல்களை (சாவிகளை) அந்தப் பெண்ணுக்கு நான் கொடுத்தேனா? நான் என்னுடைய பாக்கெட்டில் என்னுடைய கையால் தேடிதுளவிப் பார்த்தேன் (run down), அதற்குள்ளே எனக்கு

ஒரு சிறிய சதுரவடிவ தொங்கல் சீட்டு (tag) இருந்தது, அதில் ஒரு கேள்விக்குறி இருந்தது, அதன்பின்னால், ‘நித்தியத்தை நீ எங்கே கழிப்பாய்?’ என்று இருந்தது” என்றார். நல்லது, அவர், “நான் நோக்கிப் பார்த்து, ‘நல்லது யார் அதை என்னுடைய பாக்கெட்டில் வைத்திருப்பார்கள் என்று ஆச்சரியமாக இருக்கிறதே?’ என்று எண்ணினவனாக, அதை அந்த குப்பை கூடையில் வீசிவிட்டேன். ஏதோவொன்று என்னிடம், “ஆனால் அது முடிவு செய்யப்பட வேண்டும்” என்று சொன்னது. உடனே நான் கை நீட்டி, அதை மீண்டும் எடுத்தேன். நான் நடுங்கிக் கொண்டிருப்பவனாக ஆக வேண்டியிருந்தது, நான், ‘அது சரிதான், நான் நாற்பது வயதைக் கடந்து விட்டேன். எனவே நான் அதை எங்கே கழிக்கப் போகிறேன் என்பதை கண்டுபிடித்தாக வேண்டும்’ என்று நினைத்தேன்” என்று கூறினார். “ஓ, இப்பொழுது இதோ பார், நீ முழுவதுமாக குழம்பிப் போய் விட்டாய்” என்றேன். எனவே அவர் அதை மீண்டும் வீசி எறிந்து விட்டு, திரும்பிச் செல்ல முயற்சித்து, மின்விசிறியை ஆன் செய்தார் மற்றும் அதைப் போன்றவைகளைச் செய்தார். மேலும் சொன்னார்…

அவர் மீண்டுமாக அதை திரும்பிப் பார்த்தார். அது அப்படியே தொடர்ந்து அவருடைய இருதயத்தில் ஒலித்துக் கொண்டிருந்தது. “நித்தியத்தை நீ எங்கே கழிப்பாய்?” அவர் மூன்றாவது முறையாக அதை எடுத்தார். அவரால் - அவரால் வீட்டிற்குப் போகக் கூட முடியாத அளவுக்கு, அது அவரை மிகவும் பதட்டமடையச் செய்து விட்டதாகக் கூறினார்.

19. பிரபலமான சுவிசேஷகராகிய பில்லி கிரஹாம், அவருடைய மாகாணத்துக்கு மேலே உள்ள ஒரு மாகாணத்தில் இருந்து, ஒரு கூட்டத்தை நடத்திக் கொண்டிருப்பதாகவும் அவர் கேள்விப்பட்டார். அவர் அந்தக் கூட்டத்திற்குப் போனதாகக் கூறினார், அவர் அதை திரு. கிரஹாம் அவர்களிடம் கூறலாம் என்று நினைத்தார். தொடர்ந்து அவர், “திரு. கிரகாம் அவர்கள் அந்த இரவில் ஒரு குறிப்பிடத்தக்க செய்தியைப் பேசினதாகக்” கூறினார். “‘இயேசு கிறிஸ்துவைப் பார்க்க விரும்புகிறவர்கள் - இயேசு கிறிஸ்துவை ஏற்றுக்கொள்ள விரும்புகிற எல்லாரும் எழுந்து நின்று, உங்கள் கரத்தை உயர்த்துங்கள்’ என்று கூறினார்” என்பதாகச் சொன்னார். “நான் எழுந்து நின்று, என்னுடைய கரத்தை மேலே உயர்த்தினேன். அவர்கள் என்னை அந்த அறைக்குள் அழைத்துச் சென்று, என்னிடம்,

'அவர் தேவனுடைய குமாரன் என்று நான் விசுவாசித்தேனா?' என்று கேட்க, நானும், 'ஆமாம், நான் விசுவாசிக்கிறேன்' என்றேன். என்னுடைய விசுவாசத்தின் பேரில், அவர்கள் என்னை ஒரு கிறிஸ்தவனாக ஆக்கிவிட்டதாகவும், 'இப்பொழுது அதெல்லாம் முடிந்து விட்டது' என்றும் என்னிடம் கூறினார்கள்" என்று சொன்னார்.

அவரோ, "சகோதரன் பிரன்ஹாமே, ஆனால் அதெல்லாம் முடிந்து போகாமல் தான் இருந்தது. நான் வெளியேறி, பிறகு வேறொரு இடத்திற்குப் போனேன், அந்த ஜனங்கள் சுயாதீன மெதோடிஸ்டுகள் என்று அழைக்கப்பட்டார்கள். நான் பரிசுத்தமாக்கப்பட்டு, சந்தோஷத்தைப் பெற்றுக்கொண்டு, சத்தமிட வேண்டும், அப்பொழுது அதெல்லாம் முடிந்து விடும் என்று என்னிடம் கூறினார்கள். அவர்கள் என்னோடு கூட தரித்திருந்தார்கள். நான் சந்தோஷத்தைப் பெற்றுக்கொண்டேன், பரிசுத்தமாக்கப்பட்டு, சத்தமிட்டேன், அது..." என்று கூறினார். ஆனால், "'அதெல்லாம் முடிந்துவிட்டது' என்று அவர்கள் என்னிடம் கூறினார்கள்" என்றார். ஆனால் "அது முடிந்துவிடவில்லை" என்று கூறினார்.

“அதன்பிறகு, ஒரு இடத்திலிருந்து வேறொரு இடத்திற்கு மீண்டும் மீண்டுமாக கடந்து போய்க் கொண்டிருந்த ஒரு பிரபலமான பெந்தெகோஸ்தே சகோதரனிடம் போனேன், அவர் மிகப்பெரிய பெந்தெகோஸ்தே குழுவினரில் ஒருவராக இருந்தார். அவர், ‘நீர் எப்பொழுதாவது அந்நிய பாஷைகளில் பேசினதுண்டா?’ என்று கேட்க, இல்லை (என்றேன்). ‘அப்படியானால் நீர் பரிசுத்த ஆவியைப் பெற்றிருக்கவில்லை. அப்படியானால் நீர் அந்த மற்ற கூடாரத்திற்குள் சென்று, பரிசுத்த ஆவியைப் பெற்றுக்கொள்ளும்’ என்று கூறினார். அவர்கள் என்னிடம் மிகவும் அருமையாக இருந்தார்கள், என்னோடு பாடுபட்டார்கள் மற்றும் எல்லாவற்றையும் செய்தார்கள். நான் அங்கேயே தங்கியிருந்தேன், அங்கே அவர்களில் சிலர் இரவிலும் என்னோடு கூட தங்கியிருந்தார்கள். இறுதியாக, வல்லமை என்மேல் இறங்கியது. நான் வெளியே வந்தேன். நான் அடுத்த நாள் அந்த சுவிசேஷகரைக் காணச் சென்றேன். அவர், “அதெல்லாம் முடிந்து விட்டது” என்று கூறியும், சகோதரன் பிரன்ஹாமே, அதுவெல்லாம் முடியாமல் தான் இருந்தது என்று கூறினார்” என்றார்.

20. அவர் தொடர்ந்து, "அதன்பிறகு நான் அங்கிருந்து - அங்கிருந்து போய், 'சுகமளித்தலின் சத்தத்திற்குச்' சென்றேன். நான் 'சுகமளித்தலின் சத்தத்திற்குச்' போன போது, அங்கேயிருந்த அந்த சகோதரர்கள் எல்லாரோடும் போனேன், நான் என்னுடைய ஜீவியத்தில் அந்த வேறுபிரிக்கும் கோட்டைக் கடந்து விட்டதாகவும், அங்கே எனக்கு எந்த இடமுமே இல்லை என்றும் அவர்கள் என்னிடம் கூறிவிட்டார்கள். 'ஒரே காரியம் மாத்திரமே உமக்குரிய பிரச்சனைக்கு தீர்வுகொடுக்கும். நீர் சென்று சகோதரன் பிரன்ஹாமைப் பாரும்; அவர் ஒரு தீர்க்கதரிசி' என்று கூறினார்கள்" என்றார். இப்பொழுது, அது தவறாகும், ஆனால்... "'அவர்-அவர் ஒரு தீர்க்கதரிசி; அவர் உம்மை நோக்கி, நீர் கோட்டை எங்கே தாண்டியிருக்கிறீர் என்று காண முடியும், ஒருக்கால் நீர் திரும்பிச் சென்று, ஏதோவொன்றைச் செய்யலாம். நீர் செய்திராத ஏதாகிலும் ஒன்று அங்கே இருக்கிறது அல்லது - நீர் போய் அவரைப் பார்ப்பது மிக நல்லது' என்று கூறினார். சகோதரன் பிரன்ஹாமே, இதோ நான் இருக்கிறேன்" என்றார்.

நான், "நல்லது, சகோதரனே, நான் ஒரு தீர்க்கதரிசி அல்ல. ஆனால் ஜனங்களுக்கு உதவி செய்யும்படியாக, நான் காரியங்களைப் பகுத்தறியும்படி கர்த்தர் அனுமதிக்கிறார், அது ஒரு சிறு தாழ்மையான வரமாக இருக்கிறது. ஆனால் நான்-நான் என்னைத்தானே ஒரு தீர்க்கதரிசி என்று அழைத்துக்கொள்வதில்லை. ஆனால்-ஆனால் அதற்கு உமக்கு ஒரு தீர்க்கதரிசி அவசியமில்லை. நீர் அதை நேராக ஆக்குவது தான் உமக்குத் தேவையாக இருக்கிறது; அவ்வளவுதான். உமக்கு..." என்று கூறினேன்.

21. நான், "நான் உம்மிடம் ஒரு காரியத்தைக் கேட்க விரும்புகிறேன். பில்லி கிரஹாம் உம்மிடம் கூறினது சத்தியம். மெதோடிஸ்டுகள் உம்மிடம் சொன்னதும் சத்தியம் தான். மேலும் பெந்தெகோஸ்தேகாரர்கள் உம்மிடம் சொன்னதும் சத்தியம் தான். ஆனால் அவை எல்லாமே முழு சத்தியமாக இல்லை" என்றேன். புரிகிறதா? "அது சத்தியம் தான், ஆனால் அதில் எல்லாமும் அல்ல. கிறிஸ்துவை சொந்த இரட்சகராக ஏற்றுக்கொள்வதை நான் நம்புகிறேன்; நான் அதை விசுவாசிக்கிறேன். பரிசுத்தமாக்கப்படுதலையும், ஒரு ஜீவியத்தை சுத்தப்படுத்துவதையும், சந்தோஷத்தைப் பெற்றுக்கொண்டு,

சத்தமிடுவதையும் நான் விசுவாசிக்கிறேன்; நான் அதை நம்புகிறேன். அந்நிய பாஷைகளில் பேசுவதையும், ஆவியின் ஞானஸ்நானத்தையும் நான் விசுவாசிக்கிறேன், அவை எல்லாவற்றையுமே நான் விசுவாசிக்கிறேன்" என்றேன். ஆனால் நான், "நாம் பேசிக் கொண்டிருப்பது சரியாக அதைக் குறித்து அல்ல" என்றேன்.

22. "நான் உம்மிடம் ஒரு காரியத்தைக் கேட்க விரும்புகிறேன். இப்பொழுது, உம்முடைய நாற்பது வருட ஜீவியத்தில் நீர் எதையுமே செய்திருக்கவில்லை என்று நீர் கூறினதை நினைவுகூரும்" என்றேன்.

அவர், "சகோதரன் பிரன்ஹாமே, எனக்கிருந்த ஒவ்வொரு காரையும் நான் விற்று, அதை பிரசங்கிமார்களுக்கும் சுவிசேஷகர்களுக்கும் கொடுத்திருக்கிறேன். எப்படி செய்வது என்று எனக்குத் தெரிந்த எல்லாவற்றையுமே செய்து, என்னுடைய ஜீவியத்தில் நான் செய்துள்ளவற்றிற்காக ஒப்புரவாக்கப்படுதலைச் செய்து பார்த்தேன்" என்றார்.

அதற்கு நான், "அது அவசியமில்லை; நீர் அதைச் செய்திருக்க வேண்டியதில்லை" என்று

கூறினேன். பாருங்கள்? நான், "நீர் அதைச் செய்வது தேவனுக்கு ஒருபோதும் அவசியமில்லை, உள்ளே (செல்ல) உம்முடைய வழியில் அதற்கு கிரயம் செலுத்த முடியாது. அது யோசனை அல்ல". ஆனால், "அவருடைய கிருபை தான் உம்மை உள்ளே கொண்டு செல்லும்" என்றேன்.

அவர், "நல்லது, நான் எதைக் கட்டாயம் செய்தாக வேண்டும்?" என்று கேட்டார்.

நான், "ஒரு காரியத்தையும் செய்ய வேண்டியதில்லை, உம்மால் எதையுமே செய்யவும் முடியாது. நீர் உம்முடைய ஜீவியத்தில் நாற்பது வருடங்களாக, நீர் தேவனைக் குறித்து கவலைப்பட்டதில்லை என்று என்னிடம் கூறினீர். ஆனால் 'நித்தியத்தை எங்கே கழிப்பாய்?' என்று கூறின ஒரு சிறு துண்டு தாளை நீர் எடுத்த போது, ஏதோவொன்று, 'அது தீர்மானம் செய்யப்பட்டாக வேண்டும்' என்று கூறினது, உம்மால் அதைத் தாண்டிப்போகவே முடியாதிருந்தது. இப்பொழுது, நீர் ஒரு பாதையில் ஒரு வழியாகப் போய்க் கொண்டிருந்தீர், திடீரென்று, நீர் இந்த வழியாகத் திரும்பி வரத் துவங்கினீர். நீர் தேவனுக்காக கவலை கொண்டிருக்கவில்லை; (பிறகு) நீர் அவரைத் தேடிக்கொண்டு பின்னால் வரத்

தொடங்கினீர். சரியாக அங்கே தான் உம்முடைய திருப்பத்தைச் செய்தீர், அதுதான் உம்மை மாற்றிவிட்டது, சரியாக அங்கே தான்" என்றேன்.

அவர், "அப்படியானால் நான் இந்த நேரம் எல்லாம் அதை உடையவனாகத் தான் இருந்திருக்கிறேன்" என்றார்.

நான், "நிச்சயமாக" என்றேன்.

அவர், "நல்லது, தேவனுக்கு துதி உண்டாவதாக" என்றார். (பாருங்கள்?)

23. ஏதோவொரு உணர்ச்சியின் பேரில் அல்ல, ஆனால் நீங்கள் அதை விசுவாசித்தீர்களா? பாருங்கள்? அங்கேதான் நீங்கள் பெற்றுக்கொண்டீர்கள் - பெற்றுவிட்டீர்கள்... பாருங்கள், பரிசுத்தமாக்கப்படுதலைக் குறித்த எத்தனை உணர்ச்சிகள் இருந்தாலும், அது ஒரு பொருட்டேயல்ல... அது பரிசுத்தமாக்கப்பட வேண்டிய ஒரு உணர்ச்சியாகும். அது பரிசுத்த ஆவியின் ஞானஸ்நானத்தைப் பெற்றுக்கொள்ள வேண்டிய ஒரு உணர்ச்சி தான். ஆனால் நீங்கள் கிறிஸ்துவை உங்கள் இரட்சகராக ஏற்றுக்கொள்ளும் போது, அது நீங்கள் போகும் திசையை மாற்றி திரும்பும்படிக்கு செய்கிறது. எந்த மனிதனும்... இயேசு பரிசுத்த யோவான் 5:24ல் கூறியிருக்கிறார்

(ஒரு கைப்பிடி நிறைய மற்றும் இரண்டு டஜன் முட்டைகளைக் குறித்து எண்ணிப்பாருங்கள். புரிகிறதா?), 5:24ல், "என் வசனத்தைக் கேட்டு, என்னை அனுப்பினவரை விசுவாசிக்கிறவனுக்கு நித்திய ஜீவன் உண்டு (நிகழ்காலம்), அவன் நியாயத்தீர்ப்புக்குட்படாமல், மரணத்தை விட்டு நீங்கி, ஜீவனுக்குட்பட்டிருக்கிறான்." அங்கே தான் காரியம். புரிகிறதா? சரியாக அங்கே தான் நீங்கள் பின்னால் திரும்புகிறீர்கள். அது பரிசுத்த ஆவியானவரின் ஒரு பாகம் தான். பரிசுத்தமாக்கப்படுதல் என்பது பரிசுத்த ஆவியானவரின் வேறொரு பாகம். அதன்பிறகு, உங்களால் வேறு எதுவும் செய்ய முடியாமல், அதனால் மிகவுமாக நிறையப்படும்போது, சகோதரன் ரோ கூறினபடி, அப்போது அவர் உங்களுக்கு வேறொரு பாஷையைத் தருகிறார். அதன்பிறகு முயற்சிப்பது... அவர் அப்படியே உங்களை நிறைத்துவிடுகிறார். அதற்கு பரிசுத்த ஆவி அவசியமாயிருக்கிறது... "என் பிதா முதலில் ஒருவனை இழுத்துக்கொள்ளாவிட்டால், அவனால் என்னிடத்தில் வர முடியாது. பிதாவானவர் எனக்குக் கொடுத்திருக்கிற யாவும் என்னிடத்தில் வரும்." அங்கே தான் காரியம். ஆகையால் கிறிஸ்துவிடம் வர வேண்டுமென்று உங்கள் இருதயத்திற்குள் மிக மிகச் சிறிய அளவு ஒலித்துக்

கொண்டிருக்கிற போதே, நீங்கள் தாமதிக்காமல் அதை உடனடியான செய்துவிடுங்கள், ஏனென்றால் அதுதான் உங்களுக்கு எப்பொழுதாவது சம்பவிப்பதிலேயே மிகப்பெரிய காரியமாகும், உங்களுக்கு எப்பொழுதாவது சம்பவிக்கும் மிகப்பெரிய காரியம் என்னவென்றால், தேவன் தம்முடைய குமாரனுடைய கலியாண விருந்துக்கு உங்களை அழைப்பது தான். அதைக் (காட்டிலும்) பெரிதான எதுவும் எனக்குத் தெரியாது.

*செய்தி: ஆபிரகாம்*, பிப்ரவரி 11, 1961

★★★★★

**(குறிப்பு: இந்தச் செய்தியின் இறுதி திருத்தம் இன்னும் முடியவில்லை. இது புத்தகமாக அச்சிடும் போது, இறுதி திருத்தம் செய்து வெளிவரும்.)**



**Bro. Branham:**

**மக்களை எச்சரிக்காமல் காரியங்கள் இந்த விதமான நிலையை அடைய விட்டுவிட்ட இந்த பிரசங்கிகளின் கதி என்ன? தேவன் அவர்களிடம் கணக்கு கேட்பார்.**

Message: **கடல் பயணத்தில் சாட்சி**

Only believe, Only
believe
All things are possible,
Only believe.

சகோ. பினேகாஸ்
போன்: 8838623242, 9551855108
Email: jebakumarsa@gmail.com
www.thefinish.in